# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - புவிப்படங்களைக் கற்றறிதல் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) "புவிப்பட அளவை"- வரையறு.

**பதில் : புவிப்பட அளவை (Scale) :** புவிப்பட அளவை என்பது புவிப்பரப்பில் உள்ள தொலைவிற்கும் புவிப்படப்பரப்பில் உள்ள தொலைவிற்கும் இடையிலான விகிதத்தை குறிப்பதாகும்.

2) இயற்கையமைப்பு புவிப்படம் என்றால் என்ன?

**பதில் : இயற்கையமைப்புப் புவிப்படம்:** ஒரு பகுதியின் பல்வேறு இயற்கை அம்சங்களை காண்பிப்பதற்கு வரையப்படும் படங்கள் இயற்கையமைப்பு அல்லது நிலத்தோற்ற புவிப்படங்கள் எனப்படுகின்றன.

3) வரைபடக் கோட்டுச் சட்டம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

**பதில் : வரைபட கோட்டுக்சட்டம்:**
1. கோள வடிவமான புவியை ஒரு சமதளப் பரப்பில் வரைவதற்கு பின்பற்றப்படும் ஒரு நுணுக்க முறையே வரைபட கோட்டுச் சட்டமாகும்.
2. வரைபட வல்லுநர்கள் புவியின் மேற்பரப்பை படத்தில் குறிப்பதற்கு புவிப்பட கோட்டுச் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

4) இடைநிலைத் திசைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் : இடைநிலை திசைகளின் பெயர்கள்:**
i. வடகிழக்கு
ii. வடமேற்கு
iii. தென்கிழக்கு மற்றும்
iv. தென்மேற்கு

5) காணிப் புவிப்படங்களின் பயன்கள் யாவை?

**பதில் :** 1. ஒரு குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் நில உடமைகள் பற்றிய விவரங்களை காண்பிக்க காணிப் புவிப்படங்கள் பயன்படுகின்றன.
2. இப்புவிப்படங்கள் உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி, வரிவிதிப்பு, பெரும் பண்ணை, பராமரிப்பு, சட்ட ஆவணங்களில் சொத்து விவரங்களை குறிப்பிடுதல் போன்றவற்றிற்கு பயன்படுகின்றன.

6) புவிப்படத்தின் கூறுகள் யாவை?

**பதில் :** (i) தலைப்பு
(ii) புவிப்பட அளவை
(iii) புவிப்பட விளக்கம் அல்லது திறவு விசை
(iv) திசைகள்
(v) புவிப்பட மூலம்
(vi) புவிப்பட கோட்டுச் சட்டம் மற்றும் அமைவிட குறிப்பு
(vii) மரபுக் குறியீடுகள் மற்றும் சின்னஙகள்

7) வரைகலை அளவை அல்லது நேரியல் அளவை என்றால் என்ன?

**பதில் :** (i) வரைகலை அளவை என்பது ஒரு சிறிய வரைக்கோல் போன்று வரைபடத்தின் அடிப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும். இக்கோடு மேலும் சிறிய அளவிலான பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.
(ii) இதன் ஒவ்வொரு சிறு பகுதியும் நிலப்பகுதியிலுள்ள ஒரு குறிப்பிட்ட தூரத்தை குறிப்பதாக அமைந்துள்ளது.
(iii) ஒரு சிறு துண்டு நூல் அல்லது பிரிப்பான்களின் உதவியோடு புவிப்படத்தில் குறிப்பிடப்பட்ட அளவையை கொண்டு நேரடியாக நிலப்பகுதியில் உள்ள சராசரி தூரத்தை அளவிட முடியும்.
(iv) இவ்வளவைகள் மாறாதவை என்பதால் புவிப்பட நகல்கள் எடுத்துக்கொள்ள ஏதுவாக உள்ளது இதன்

சிறப்பம்சமாகும்.

8) கருத்துப்படங்கள் என்பவை யாவை?

**பதில் :** (i) கருத்துப்படங்கள் என்பவை வெப்பநிலை வேறுபாடுகள், மழைப்பரவல், மக்களடர்த்தி போன்ற ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்காகத் தயாரிக்கப்படுபவை ஆகும்.
(ii) இப்படங்கள் உலகளாவிய மக்களடர்த்தி, நோய்த்தாக்கம் போன்றவற்றின் பிரதேச வேறுபாடுகளை காண்பிக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன. இவை பொதுப் புவிப்படங்களிலிருந்து வேறுபடுகின்றன.

9) "கெடஸ்ட்ரல்" என்றால் என்ன?

**பதில் :** "கெடஸ்ட்ரல்" எனும் வார்த்தை ஃபிரெஞ்ச் மொழியிலுள்ள "கெடஸ்டர்" எனும் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் " பிராந்திய சொத்துகளின் பதிவேடு" என்பதாகும்.

10) புவிப்படம் என்றால் என்ன?

**பதில் :** புவிப்படம் என்பது முழுப்புவியையோ அல்லது புவியின் ஒரு பகுதியையோ ஒரு சமதளப்பரப்பில் அளவையுடன் பதிலீட்டுக் காட்டும் ஒரு முறையாகும்.

11) புவிப்படத்தை கற்றறிதல் என்றால் என்ன?

**பதில் :** 1. புவிப்படத்தை கற்றறிதல் என்பது புவிப்படத்தில் உள்ள விவரங்களை புரிந்துகொள்ளுதல் அல்லது புவியியல் சார்ந்த விவரங்களை விவரணம் செய்தல் ஆகும்.
2. புவிப்படத்தை கற்றலின் மூலம் புவிப்படக் குறியீடுகளை பயன்படுத்தி ஒருவர் புவியின் மன வரைபடத்தை உருவாக்கும் திறனைப் பெறுகிறார்.

12) புவிப்படத்தின் கூறுகள் யாவை?

**பதில் :** **புவிப்படத்தின் கூறுகள் :**
1. தலைப்பு
2. புவிப்பட அளவை
3. புவிப்பட விளக்கம் அல்லது திறவு விசை
4. திசைகள்
5. புவிப்பட கோட்டுச் சட்டம் மற்றும் அமைவிட குறிப்பு
6. புவிப்பட மூலம்
7. மரபுக் குறியீடுகள் மற்றும் சின்னங்கள்

13) தலைப்பு என்றால் என்ன?

**பதில் :** புவிப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளடக்கம் குறித்து கூறுவது தலைப்பாகும். பொதுவாக தலைப்பானது புவிப்படத்தில் மேல் அல்லது கீழே உள்ள ஒருவிளிம்புப்பகுதியில்கொடுக்கப்பட்டிருக்கும்.

14) புவிப்பட மூலம் குறிப்பு தருக.

**பதில் :** 1. புள்ளி விவரங்களைக் காண மூலங்களை குறிப்பிடுதல் அவசியமான ஒன்றாகும்.
2. பொதுவாக இம்மூலங்கள் புவிப்படத்தின் கீழ் வலதுபுறத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
3. புவி வரைபடத்தின் கீழ் இடதுபுறத்தில் ஆசிரியரின் பெயர், வெளியிடுவோர் விவரம், வெளியிடும் இடம், வருடம் ஆகிய விவரங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

15) காணிப் புவிப்பட அளவை பற்றி எழுதுக.

**பதில் :** 1. காணிப் புவிப்பட அளவை பொதுவாக 1: 500 லிருந்து 1: 10000 வரை உள்ள அளவைகளில் இவ்வகைப் படங்கள் உருவாக்கப்படுகின்றன.
2. கட்டடங்கள், வடிகாலமைப்பு போன்ற துல்லிய விவரங்களை அளிக்கும் பெரிய அளவை புவிப்படங்கள் காணிப்பட அளக்கை மூலம் தயாரிக்கப்படுகின்றன.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) பல்வேறு புவிப்பட அளவுகளை விரிவாக விளக்குக.

**பதில் : புவிப்பட அளவைகள் :**

புவிப்படங்களில் அளவைகள் மூன்று வகைகளில் குறிப்பிடப்படுகின்றன. அவை,

1. வாக்கிய முறை அல்லது சொல்லளவை (Statement or verbal scale)

2. பிரதிபின்ன முறை அல்லது விகிதாச்சார முறை (Representative fraction or Ratio scale)

3. வரைகலை அளவை அல்லது நேரியல் அளவை (Graphical or Bar scale)

**1. வாக்கிய முறை அல்லது சொல்லளவை:**

இம்முறையில் அளவுத்திட்டமானது சொற்களால் விவரிக்கப்படுகிறது. 1 செ.மீ என்பது 1 கி.மீ. அதாவது வரைபடத்தில் 1 செ.மீ. என்பது நிலப்பகுதியில் 1 கி.மீ. தூரத்தைக் குறிக்கின்றது. ஆகையால் வரைபடத்தில் 1 செ.மீ. : 1 கி.மீ., 1 அங்குலம் : 1 மைல் எனக் குறிக்கப்பட்டிருக்கும். ஒரு எளிமையான வாக்கிய அளவுத்திட்டம் என்பது கீழ்க்கண்ட குணாதிசியங்களைப் பெற்றிருக்கும்.

i. அளவையின் தொகுதி சென்டிமீட்டரிலிருந்தால் அதன் விகுதி மீட்டரிலோ அல்லது கிலோ மீட்டரிலோ இருக்கும்.

ii. தொகுதி அங்குலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அதன் விகுதி மைல்களில் இருக்கும்.

**2. பிரதிபின்னமுறை (அ) எண்சார் பின்னமுறை (அ) விகிதாச்சார முறை :**

i. இம்முறையில் புவிப்படப்பரப்பில் உள்ள தொலைவும் புவிப்பரப்பில் உள்ள தொலைவும் ஒரே அளவில் குறிப்பிடப்படுகிறது.

ii. உதாரணமாக 1: 50,000 என்பது புவிப்படத்தில் 1 அலகு என்பது புவியில் 50,000 அலகுகளைக் குறிக்கின்றது. அதாவது வரைபடத்தில் 1 செ.மீ. அல்லது 1 அங்குலம் என்பது புவியில் 50,000 செ.மீ. அல்லது 50,000 அங்குலம் என்பதைக் குறிக்கின்றது. பிரதிபின்ன முறையில் அளவையானது 1/50,000 அல்லது 1 : 50,000 எனக் குறிப்பிடப்படுகிறது.

**3. வரைகலை அளவை அல்லது நேரியல் அளவை:**

i. இந்த அளவை ஒரு சிறிய வரைக்கோல் போன்று வரைபடத்தின் அடிப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

ii. இக்கோடு மேலும் சிறிய அளவிலான பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.

iii. இதன் ஒவ்வொரு சிறு பகுதியும் நிலப்பகுதியிலுள்ள ஒரு குறிப்பிட்ட தூரத்தை குறிப்பதாக அமைந்துள்ளது.

17) காணிப் புவிப்படங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை விவரி.

**பதில் : 1. காணிப் புவிப்படங்கள்:**

i. ஒரு குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் நில உடமைகள் பற்றிய விவரங்களை காண்பிக்க காணிப் புவிப்படங்கள் பயன்படுகின்றன.

ii. இவ்வகைப்படங்கள் திட்ட புவிப்படங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

iii. இவை பெரிய அளவையைக் கொண்டுள்ளதால் குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் கட்டடங்களின் முழு விவரங்களையும் அளிக்கின்றன.

iv. இப்புவிப்படங்கள் உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி, வரிவிதிப்பு, பெரும்பண்ணை, பராமரிப்பு, சட்ட ஆவணங்களில் சொத்து விவரங்களை குறிப்பிடுதல் போன்றவற்றிற்கு பயன்படுகின்றன.

v. இப்புவிப்படங்கள் பொதுப் பதிவிற்கான ஆவணங்களாக பயன்படுத்தப்படுவதால் இவை அரசாங்கத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**2. காணிப்புவிப்படத்தின் முக்கியத்துவம் :**

i. காணிப்புவிப்படங்கள், ஒரு நிலத்தின் நில உடமை, எல்லைகள், மாதிரிப் படங்கள், கட்டடத்திட்டப் படங்கள், விளக்கப் படங்கள் ஆகியவை மூலம் ஆவணங்களாக பதிவு செய்கின்றன.

ii. தொடக்கத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தின் மதிப்பினை அறிந்துகொள்ளவும், வரிவிதிப்பிற்கும் இவ்வகை புவிப்படங்கள் பயன்படுத்தப்பட்டன.

18) மரபுக்குறியீடுகள் மற்றும் சின்னங்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக.

**பதில் : மரபு குறியீடுகள் மற்றும் சின்னங்கள் (Conventional sings and symbols) :**

1. புவிப்படத்தில் பல்வேறு தோற்றங்களைக் குறிப்பிடப்படுவதற்கு புவிப்படக் குறியீடு மற்றும் சின்னங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

2. இச்சின்னங்கள் புவிப்பட திறவு விசை பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

3. ஒரு சிறிய பகுதியில் அதிக தகவல்களை இக்குறியீடுகள் மற்றும் சின்னங்கள் அளிக்கின்றன.

4. இதன் மூலம் புவிப்படங்களை எளிதாக உருவாக்கலாம்.

5. மேலும் இவற்றின் மூலம் புவிப்பட கருத்துக்களையும் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

6. சில குறியீடுகள் மற்றும் சின்னங்களை பயன்படுத்த சர்வதேச ஒப்பந்தம் அல்லது நடைமுறை பின்பற்றப்படுகிறது.

7. இவை மரபுக் குறியீடுகள் மற்றும் சின்னங்கள் எனப்படுகின்றன.

8. சூழல் சின்னங்கள் அல்லது குறியீடுகள் என்பதை குறிப்பிட வல்லுனர்கள் முடிவு செய்யப்படும் மற்றொரு வகையாகும்.

19) புவிப்படங்களின் பயன்கள் பற்றி விவரிக்கவும்.

**பதில் : புவிப்படங்களின் பயன்கள்:**

1. பொருட்கள் மற்றும் இடங்களின் அமைவிடத்தைக் கண்டறிய பயன்படுகிறது.
2. போக்குவரத்து வழித்தடங்களைக் காண பயன்படுகிறது.
3. இராணுவத்தினருக்கு பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் காண பயன்படுகிறது.
4. சுற்றுலா வழிகாட்டியாக பயன்படுகிறது.
5. உலகளாவிய பல்வேறு நிகழ்வுகளின் பரவல்களைக் காண பயன்படுகிறது.
6. வானிலை நிகழ்வுகளை அறிவிக்கிறது.
7. புவியியலை கற்றுக் கொள்ள மிகவும் பயனுள்ளதாக உள்ளது.
8. உலகை ஒரு சிறிய அளவில் சரியான வடிவில் காண்பிக்கின்றது.